முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 671**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**31.07.2021**, சனிக்கிழமை

1. பார்வெல்ல பிறந்த சத்குருவே
பரமானந்த சதாசிவ ஞானியே
சீர்திருத்தம் செய்து இந்த கலியுகத்தை
சித்திமிகு ஞானயுகமாக மாற்றவந்த மாதவசியே
2. தவசியே அரங்கனே உந்தனுக்கு
தரணியில் சுப்ரமணியர் யானும் இனிதே
அவதார ஞானி உந்தனுக்கு
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
3. தன்னிலே அரங்கன் தர்மமே உலகை ஆளும்
தவசி உன் சன்மார்க்கமே இந்த உலகை வெல்லும்
அண்ணலாக நீ செய்து வருகின்ற அறமே
அகிலத்தார்க்கு அழியாமை என்கின்ற சக்தியை தரும்
4. தருகவே அரங்கன் உன்னை தொடர்ந்து வரும் தரணியோர்க்கே
கலியில் ஞானியாகும் வாய்ப்பு
தடையின்றி ஆறுமுகன் என் அருளால் வாய்க்கும்
தவசியே உலகளாவிய வண்ணம் உன் சக்தி
5. சக்தியதும் பிரணவ சித்தியாக மாறி
தரணியோர்க்கு காப்பு கவசமாக வர
அவனியில் அச்சுறுத்துகின்ற நச்சுக்கிருமி அல்லலும்
அகிலத்தாரை அனுகாது அகன்றோடி பாதுகாப்பு பெருகும்
7. பெருகவே அரங்கன் தர்மத்தை செய்து கொண்டு
பேருலகில் எங்கு சரவணச்சுடரேற்றி
ஆறுமுகனார் நாமஜெப வழிபாடு
ஆற்றலாக இயக்கப்படுகின்றதோ
8. இயக்கப்படும் அனைத்து திக்கிலுமே
இணையில்லாத ஆறுமுகன் என் சக்தி பரவி
தயக்கமற அவர்களுக்குப் பாதுகாப்பும்
தக்க பொருளாதார வளமும் ஞானபலமும்

9. பலமான சித்தியும் பிறவாத பெரும்பேறும்
பழுதில்லா அரங்கன் உன் அருளாலே தயவாலே கிட்டநேரும்
பெருமைபட ஓங்காரக்குடில் நோக்கி
பேருலகோர் வருகவருக இந்த அற்புதம்

10. வருமுலகில் சடுதி கண்டு கலியுகம்
வல்லமைமிக்க ஞானயுகமாக மாறும்
மாறுதலை தரும் ஒரே ஞானி அரங்கன்
மகத்துவத்தை தரும் சிறந்த ஞானி

11. ஞான தேசிகன் ஆறுதல்பட உலகோர்
அரங்கன் அவதாரம் அறிந்து உணர்ந்து இணைய
அகிலமே பெரும்பாதுகாப்பாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–